**செய்தி வெளியீடு எண்: 930** **நாள்: 17.12.2018**

# <u>செய்தி வெளியீடு</u>

தமிழ்நாடு அரசு, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககமும் சென்னை, இலயோலா கல்லூரியும் இணைந்து 17.12.2018 நாள் அன்று சென்னை, இலயோலா கல்லூரியில் அகராதியியல் பன்னாட்டு கருத்தரங்கை நடத்தியது. இக்கருத்தரங்கிற்கு இலயோலா கல்லூரி, ஆய்வுப்புல முதல்வர் டாக்டர் எஸ். வின்சென்ட் அவர்கள் தலைமை தாங்கினார்கள். அகரமுதலி இயக்குநர் திரு. தங்க. காமராஜ் அவர்கள், அனைவரையும் வரவேற்று நோக்கவுரையாற்றி அகரமுதலித் துறையின் செயற்பாடுகளைப் பற்றியும் மாணவர்கள் அகராதியை பயன்படுத்த வேண்டிய அவசியத்தைப் பற்றியும் விவரித்துக் கூறினார். அடுத்து வாழ்த்துரை வழங்கிய தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித் துறையின் அரசு செயலாளர் திரு. இரா. வெங்கடேசன், இ.ஆ.ப., அவர்கள் அகராதிப்பணி என்பது மிகவும் கடினமான பணி என்றும் இந்தப் பணியைச் செய்வதற்கு மிகுந்த பொறுமையும் அறிவுப் புலமையும் தேவை என்றும் அகராதிப் பணியை பாராட்டினார். ஆங்கிலச் சொல்லுக்கு நிகரான தமிழ்ச் சொற்களை வடிவமைக்கும் திட்டத்தின் தொடக்கமாக சொல் உண்டியலை திறந்து வைத்துப் பேசிய தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள், **மாண்புமிகு க. பாண்டியராஜன் அவர்கள்** ஆங்கிலத்தில் உள்ளது போன்ற **'சொற்குவை'** தமிழுக்கும் அவசியம் தேவை என்றும் அதனை உருவாக்கிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர் செலவினமாக ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து சட்டமன்றத்தில் அறிவித்தார்கள் என்றும் அந்தச் **'சொற்குவை'** திட்டம் விரைவில் செயல்பாட்டிற்கு வரும் என்றும் அதற்கான வரைவுத் திட்டம் தயார் நிலையில் உள்ளது என்றும் கூறினார். இந்தச் **'சொற்குவை'**த் திட்டத்திற்கு மாணவர்களும் இளைஞர்களும் பேராசிரியர்களும் தமிழ் அறிஞர்களும் ஒத்துழைப்புத் தர வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார்.

கார்க்கி ஆராய்ச்சி நிறுவனத் தலைவர் டாக்டர் மதன் கார்க்கி அவர்கள் வளர்ந்து வரும் தொழில்நுட்பத்திற்கு ஏற்ப மின் அகராதிகள் பயன்பாட்டிற்கு வர வேண்டும் என்றும் அந்த மின் அகராதிகள் உருவாக்கத்திற்கு மாணவர்கள் ஒத்துழைக்க வேண்டும் என்றும் கூறினார்.

பிரான்ஸ் நாட்டை சேர்ந்த பன்னாட்டு மொழியியல் ஆராய்ச்சி நிறுவனத் தலைவர் டாக்டர். ச. சச்சிதானந்தம் அவர்கள் அகராதிக் கலையின் வளர்ச்சி வரலாறு பற்றியும் அகராதியின் அவசியத்தைப் பற்றியும் மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் விரிவாகப் பேசினார்.

இலயோலாக் கல்லூரியின் ஆய்வுப்புல முதல்வர் டாக்டர். எஸ். வின்சென்ட் அவர்கள் சமுதாய நோக்கில் அகராதியியல் என்ற தலைப்பிலும், தமிழ்த் துறைத் தலைவர் டாக்டர் அ. டேனியல் அவர்கள், அகராதியின் பயன்பாடு குறித்தும் விரிவாகப் பேசினர். ஆங்கிலத் துறைத் தலைவர் டாக்டர் கி. சூ. அந்தோணிசாமி அவர்கள், நாள்தோறும் புதுவரவாக வரும் பிறமொழிக் கலைச்சொற்களுக்கு நிகரான தமிழ்ச்சொற்கள் உடனுக்குடன் வடிவமைக்கப்பட வேண்டும் என்றும் அந்த முயற்சியில் மாணவர்கள் ஈடுபட வேண்டும் என்றும் கூறினார்.

இலயோலாக் கல்லூரியின் ஆங்கிலத் துறையின் உதவிப் பேராசிரியர் டாக்டர். டேவிட் ஸ்டான்லி அவர்கள், நன்றியுரையாற்றினார். கல்லூரியின் மாணவ, மாணவிகளும் அகராதியியல் அறிஞர்களும் பேராசிரியர்களும் பெருந்திரளாகக் கலந்துக் கொண்டனர்.

**“சொல் உண்டியலில்”** சேகரிக்கப்பட்ட சொற்களைத் தேர்ந்தெடுத்து சிறந்த முறையில் சொல் வடிவமைத்த மூன்று மாணவ மாணவிகளுக்குப் பாராட்டு சான்றிதழ்கள் வழங்கிப் பெருமைப்படுத்தப்பட்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**